EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI
12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045
https://www.evastaliniasacademy.in/
Contact Number - +91-8678969915, +91-9940332851

# கோரமண்டல் ரயில் விபத்து: 70 பேர் பலி

## சென்னை வந்தபோது ஒடிஸாவில் சம்பவம்

**பாலசோர், ஜூன் 2:** மேற்கு வங்க மாநிலம், கொல்கத்தாவின் ஹௌராவிலிருந்து சென்னை நோக்கி வந்த கோரமண்டல் விரைவு ரயில், ஒடிஸாவின் பாலசோர் மாவட்டத்தில் தடம்புரண்டிருந்த பெங்களூரு-ஹௌரா ரயிலுடனும், நின்றுகொண்டிருந்த சரக்கு ரயிலுடனும் மோதி வெள்ளிக்கிழமை இரவு விபத்துக்குள்ளானது.

இந்தக் கோர விபத்தில் 70 பேர் உயிரிழந்தனர். 350-க்கும் மேற்பட்ட பயணிகள் காயமடைந்தனர். இரண்டு பயணிகள் ரயில் இந்த விபத்தில் சிக்கியுள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

கொல்கத்தா, ஹௌராவில் அமைந்துள்ள ஷாலிமார் ரயில் நிலையத்தில் இருந்து நாள்தோறும் பிற்பகல் 2.50 மணியளவில் சென்னைக்குப் புறப்படும் 'கோரமண்டல் விரைவு ரயில்' (எண் 12841) மறுநாள் மாலை 5 மணியளவில் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் வந்தடையும். வழக்கம்போல் வெள்ளிக்கிழமை பிற்பகல் ஹௌராவிலிருந்து புறப்பட்ட கோரமண்டல் விரைவு ரயில், 255 கி.மீ. கடந்து ஒடிஸாவின் பாலசோர் மாவட்டத்துக்கு வந்தடைந்தது.

அப்போது, பாஹாநாகா பஜார் ரயில் நிலையம் அருகே ஏற்கெனவே தடம்புரண்டிருந்த பெங்களூரு-ஹௌரா ரயில் (எண் 12864) பெட்டிகள் மீது மோதி விபத்துக்குள்ளானது. இதனால் தடம்புரண்ட கோரமண்டல் விரைவு ரயிலின் பெட்டிகள், பக்கவாட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சரக்கு ரயிலுடன் மோதி நின்றன. இரவு 7 மணியளவில் நடைபெற்ற இந்த விபத்தில் 10-க்கும் மேற்பட்ட பெட்டிகள் தடம்புரண்டன.

விபத்து குறித்து தகவலறிந்ததும் தேசிய, மாநில பேரிடர் மீட்புப் படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து உள்ளூர் மக்கள் துணையுடன் மீட்புப் பணியைத் தொடங்கினர். இரவு நேரம் என்பதால் மீட்புப் பணிகளில் சிரமம் ஏற்பட்டது. மீட்கப்பட்டோரை மருத்துவமனைக்கு கொண்டுசெல்ல 60 ஆம்புலன்ஸ்கள் ஈடுபடுத்தப்பட்டன.



தடம்புரண்ட கோரமண்டல் விரைவு ரயிலில் நடைபெற்ற மீட்புப் பணி.

மீட்கப்பட்ட பயணிகள் பாலசோர் மாவட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும், சோரோ, கோபால்பூர் மற்றும் காந்தாபடா பகுதிகளில் அமைந்துள்ள மருத்துவமனைகளிலும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தடம் புரண்ட பெட்டிகளில் பயணிகள் பலர் சிக்கியுள்ளதால் உயிரிழப்பு மற்றும் காயமடைந்தோர் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

மீட்பு நடவடிக்கைகளுக்கு உதவ நிவாரண ரயில்கள் சம்பவ இடத்துக்கு அனுப்பப்பட்டிருப்பதாக தென் கிழக்கு ரயில்வே நிர்வாகம் தெரிவித்துள்ளது. விபத்தால் 10-க்கும் மேற்பட்ட வழித்தடங்களில் ரயில் போக்குவரத்து முற்றிலுமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

விபத்து குறித்து பயணிகளின் குடும்பத்தினர், உறவினர்கள் தகவல் அறிய அவசர கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டு உதவி எண்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

மீட்புத் துறை தலைமை கட்டுப்பாட்டு அறைக்கு ஒடிஸா முதல்வர் நவீன் பட்நாயக் நேரில் வருகை தந்து மீட்புப் பணிகளை ஒருங்கிணைத்து வருகிறார்.

**நிவாரணம்:** விபத்தில் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு ரூ.10 லட்சமும், காயமடைந்தவர்களுக்கு ரூ.2 லட்சமும் ரயில்வே அமைச்சகம் நிவாரணம் அறிவித்துள்ளது.

## ஒடிஸா முதல்வருடன் ஸ்டாலின் பேச்சு

**சென்னை, ஜூன் 2:** ஒடிஸா ரயில் விபத்து தொடர்பாக அந்த மாநில முதல்வர் நவீன் பட்நாயக்குடன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தொலைபேசியில் ஆலோசனை நடத்தினார்.

மீட்புப் பணிகளை ஒருங்கிணைக்க தமிழக அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், எஸ்.எஸ்.சிவசங்கர் ஆகியோர் ஒடிஸா செல்லவுள்ளனர்.

**அவசர உதவி எண்கள் அறிவிப்பு:** சென்னை பயணிகள் குறித்த தகவல்களுக்கு 044-25330952, 044-25330953, 044-25354771 எனும் உதவி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

மேலும், ஹௌராவுக்கு 033-26382217, காரக்பூருக்கு 89720 73925, 93323 92339, பாலசோருக்கு 8249591559, 79784 18322, ஷாலிமருக்கு 99033 70746 எனும் எண்களில் தொடர்பு கொள்ளலாம் என தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

**தமிழக அரசு உதவி எண்கள்:** 044-28593990, 94458 69843 ஆகிய இரு அவசர கால உதவி எண்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. 1070 கட்டணமில்லா எண் வழியே தொடர்பு கொள்ளலாம் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

**குடியரசுத் தலைவர், பிரதமர் இரங்கல்:** விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா, தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்தனர்.

மீட்புப் பணிகளை விரைவுபடுத்த மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் ஒடிஸா விரைந்தார்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

**https://www.evastaliniasacademy.in/**

**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# நிகழ் நிதியாண்டில் ரூ.25,567 கோடி வருவாய் இலக்கு

**சென்னை, ஜூன் 2:** நிகழ் நிதியாண்டில் ரூ.25 ஆயிரத்து 567 கோடிக்கு வருவாய் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்தார்.

சென்னையில் உள்ள ஒருங்கிணைந்த வணிகவரி மற்றும் பதிவுத் துறை வளாகக் கூட்டரங்கில் அவரது தலைமையில் வெள்ளிக்கிழமை ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், அமைச்சர் பி.மூர்த்தி பேசியதாவது:

இதுவரை இல்லாத அளவாக, கடந்த நிதியாண்டில் பதிவுத் துறை மூலம் ரூ.17 ஆயிரத்து 296 கோடி வருவாய் ஈட்டப்பட்டது.

நிகழ் நிதியாண்டில், பதிவுத் துறை வழியாக, ரூ. 25 ஆயிரத்து 567 கோடி வருவாய் ஈட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த வருவாயை ஈட்டுவதற்குத் தேவையான உரிய நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும்.

மேலும், பதிவு சட்டப் பிரிவின் கீழான விசாரணைகளை துரிதப்படுத்த வேண்டும். நிலுவை ஆவணங்கள், பதிவுற்ற ஆவணங்கள் அன்றே திரும்ப வழங்குதல் போன்ற பணிகளில் கூடுதலான கவனத்துடன் செயல்பட்டு திட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும்.

## வணிகவரித் துறை அமைச்சர் பி.மூர்த்தி



வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் சென்னையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற துறை உயரதிகாரிகளுடனான ஆலோசனைக் கூட்டம். உடன் துறைச் செயலர் பா.ஜோதி நிர்மலாசாமி, பதிவுத் துறைத் தலைவர் தினேஷ் பொன்ராஜ்.

மாவட்ட வருவாய் அலுவலர் முத்திரை), தனித் துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோர் இந்திய முத்திரைச் சட்டப் பிரிவின் கீழ் உத்தரவிடப்பட வேண்டிய ஆவணங்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றார் அமைச்சர் பி.மூர்த்தி.

இந்தக் கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத் துறைச் செயலாளர் பா.ஜோதி நிர்மலாசாமி, பதிவுத் துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் , அனைத்து துணை பதிவுத் துறை தலைவர்கள், நிர்வாக மாவட்ட பதிவாளர்கள், தணிக்கை மாவட்ட பதிவாளர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள் (முத்திரை) மற்றும் தனி துணை ஆட்சியர்கள் (முத்திரை) உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# வனப் பாதுகாப்பு சட்டத் திருத்த மசோதா: உயர்நீதிமன்ற உத்தரவுக்கு இடைக்காலத் தடை

**புது தில்லி, ஜூன் 2:** மத்திய அரசின் வனப் பாதுகாப்புச் சட்டத் திருத்த மசோதா குறித்து கருத்துக் கோரும் அறிவிப்புக்கு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை பிறப்பித்த தடைக்கு உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்து வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது.



வனப் பாதுகாப்புச் சட்டத் திருத்த மசோதாவை மத்திய அரசு அண்மையில் அறிமுகப்படுத்தியது. இது மக்களவை வலைதளத்தில் ஆங்கிலத்தில் மட்டும் வெளியிடப்பட்டது. இந்த மசோதா தொடர்பாக கருத்துகளை வரவேற்ற மத்திய அரசு, ஆங்கிலம் மற்றும் ஹிந்தியில் கருத்துகளைத் தெரிவிக்கலாம் என அறிவித்தது.

இந்த அறிவிப்பை எதிர்த்து வழக்குரைஞர் ஜி.தீரன் திருமுருகன் என்பவர் சார்பில் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில், 'வனப் பாதுகாப்புச் சட்டம் இந்தியா முழுமைக்கும் பொருந்தும். அந்த வகையில், ஆங்கிலத்தில் மட்டும் வெளியிடப்பட்டுள்ள இந்த மசோதாவை தமிழகத்தில் உள்ள பலர் புரிந்து கொள்வது கடினம். எனவே, மசோதாவை தமிழிலும் வெளியிட உத்தரவிடுவதோடு, அதன் மீதான கருத்துகளை அனைத்து மாநில மொழிகளிலும் வரவேற்கவும் மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும்' என்று கோரியிருந்தார்.

இந்த மனுவை விசாரித்த உயர்நீதிமன்றம், மசோதா மீது கருத்துகளை வரவேற்று வெளியிட்ட அறிவிப்புக்கு இடைக்காலத் தடை விதித்தும், மக்களவைச் செயலகம் பதில் மனு தாக்கல் செய்யவும் உத்தரவிட்டது.

இதை எதிர்த்து மத்திய அரசு சார்பில் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு உச்சநீதிமன்ற நீதிபதிகள் தீபங்கர் தத்தா, பங்கஜ் மித்தல் ஆகியோர் அடங்கிய அமர்வு முன் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது.

அப்போது மத்திய அரசுத் தரப்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, 'சட்டம் இயற்றும் நடவடிக்கைகளில் உயர்நீதிமன்றம் தலையிடக் கூடாது. அதோடு, மனுதாரர் எளிதாக கருத்துகளைத் தெரிவிக்கும் வகையில், மசோதாவை தமிழ் மொழியிலும் வரும் திங்கள்கிழமை (ஜூன் 5) வெளியிட மக்களவைச் செயலகம் நடவடிக்கை எடுத்து வருகிறது' என்றார்.

இதைக் கேட்ட நீதிபதிகள், 'சொலிசிட்டர் ஜெனரல் அளித்த பதிலின் அடிப்படையில், மசோதா மீது கருத்து கோரும் அறிவிப்புக்கு உயர்நீதிமன்றம் பிறப்பித்த தடைக்கு இடைக்காலத் தடை விதிக்கப்படுகிறது' என்று உத்தரவிட்டனர்.

EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI
12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045
https://www.evastaliniasacademy.in/
Contact Number - +91-8678969915, +91-9940332851

# சுற்றுச்சூழலைப் பாதுகாக்க விழிப்புணர்வு நடவடிக்கைகள்

## சுகாதாரத் துறை உத்தரவு

**சென்னை, ஜூன் 2:** தமிழகத்தில் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு மாவட்ட சுகாதாரத் துறை அலுவலர்களுக்கு பொது சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் செல்வவிநாயகம் அறிவுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் அனைத்து மாவட்ட துணை சுகாதாரத் துறை இயக்குநர்களுக்கும் அனுப்பியுள்ள சுற்றறிக்கை:

வரும் 5-ஆம் தேதி உலக சுற்றுச் சூழல் விழிப்புணர்வு தினம் கடைப்பிடிக்கப்படுவதையொட்டி, அன்றைய தினத்தில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துமாறு சுகாதாரத் துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

அதன்படி, தனிப்பட்ட முறையிலும், அலுவலக அளவிலும் பிளாஸ்டிக் பயன்பாட்டை குறைக்க நடவடிக்கை எடுத்தல் அவசியம். அதேபோன்று காகிதப் பயன்பாட்டையும் கூடுமான வரை தவிர்த்தல் முக்கியம்.

அலுவலகங்களில் பிளாஸ்டிக் தட்டுகள், குவளைகள், பாட்டில்களுக்கு மாற்றாக வேறு பொருள்கள் பயன்படுத்தப்படுவதை ஊக்குவிக்க வேண்டும். காற்று மாசுபாட்டைத் தவிர்க்க பொது போக்குவரத்தையும், மிதிவண்டியையும் பயன்படுத்தலாம். உடல் ஆரோக்கியத்துக்காக நடைப்பயிற்சியை ஊக்குவிக்கலாம்.

மற்றொருபுறம் பொது மக்களிடையே பிளாஸ்டிக் பயன்பாட்டைத் தவிர்ப்பது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதல், உணவுப் பொருள்களை வீணாக்காமல் உரமாகப் பயன்படுத்துதல் ஆகியவை குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்று அந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# தேசத் துரோக வழக்கில் குறைந்தபட்ச தண்டனை 7 ஆண்டுகள்

## இந்திய சட்ட ஆணையம் பரிந்துரை

**புது தில்லி, ஜூன் 2:** தேசத் துரோக வழக்கு குற்றவாளிகளுக்கு குறைந்தபட்சமாக அளிக்கப்படும் 3 ஆண்டுகள் சிறைத் தண்டனையை 7 ஆண்டுகளாக அதிகரிக்க வேண்டும் என்று இந்திய சட்ட ஆணையம் பரிந்துரை செய்துள்ளது.

அண்மையில் ஓய்வு பெற்ற சட்ட ஆணையத்தின் தலைவரும் நீதிபதியுமான ரிது ராஜ் அவஸ்தி, மத்திய சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வாலிடம் அளித்த பரிந்துரையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசத் துரோக வழக்கின் பயன்பாடு என்ற தலைப்பில் சட்ட ஆணையம் மத்திய அரசுக்கு அளித்துள்ள அறிக்கையின் விவரம்:

இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 124ஏ (தேசத் துரோகம்), குற்றவாளிகளுக்கு குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் சிறை அல்லது ஆயுள் சிறை அல்லது அபராதத் தொகை விதிக்க வகை செய்கிறது.

குறைந்தபட்ச தண்டனையாக அபராதம் செலுத்திவிட்டால் தேசத் துரோக வழக்கில் இருந்து விடுதலையாகிவிடலாம். ஆகவே, குறைந்தபட்ச தண்டனையையே 7 ஆண்டுகளாக உயர்த்த வேண்டும். அப்போதுதான் குற்றத்தின் தன்மையின் அடிப்படையில் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கலாம் என்று சட்ட ஆணையம் பரிந்துரைத்துள்ளது.

**ஆலோசனைக்கு பிறகு முடிவு:** சட்ட ஆணையத்தின் பரிந்துரை தொடர்பாக அனைத்துத் தரப்பினருடன் கலந்து ஆலோசித்த பின்பு உரிய நடவடிக்கையை அரசு எடுக்கும் என்று மத்திய சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் தெரிவித்தார்.

தற்போதுதான் இந்தப் பரிந்துரை அறிக்கை கிடைக்கப் பெற்றுள்ளது. பொதுநலனைக் கருத்தில்கொண்டு அரசு அனைத்துத் தரப்பினருடன் ஆலோசித்து முடிவு எடுக்கும் என்று அமைச்சர் மேக்வால் ட்விட்டரில் தெரிவித்துள்ளார்.

**காங்கிரஸ் கண்டனம்:** தேசத் துரோக குற்றத்தின் தண்டனையை அதிகரித்து அந்தச் சட்டத்தை மேலும் கொடூரமாக்க பாஜக அரசு திட்டமிட்டு வருகிறது என்று காங்கிரஸ் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் அபிஷேக் சிங்வி, 'அரசுக்கு எதிரானவர்களை அமைதிப்படுத்த தேசத் துரோக வழக்கை பாஜக பயன்படுத்துகிறது.

ஆட்சி செய்பவர்களுக்கும், மற்றவர்களுக்கும் இடையே இடைவெளியை உருவாக்க காலனித்துவ மனநிலையை இந்தச் சட்டம் ஏற்படுத்துகிறது. குடியரசின் அடித்தளத்தை இந்தச் சட்டம் வேருடன் சாய்த்துவிடும். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பு இந்தச் சட்டம் எதிர்க்கட்சியினருக்கு எதிராகப் பயன்படுத்தப்படலாம்' என்றார்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# நிதிப் பற்றாக்குறையில் சரசுவதி மகால் நூலகம்!

**வி.என். ராகவன்**

**தஞ்சாவூர், ஜூன் 2:** தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகத்துக்கு நிதிப் பற்றாக்குறை அதிகரித்து வருவதால், ஊதியம், ஓய்வூதியம் வழங்குவதில் மிகப்பெரும் சிக்கல் நிலவுகிறது.

ஆசியாவின் மிகப் பழைமையான நூலகங்களில் ஒன்றான இந்த நூலகம் கி.பி. 1535 - 1675-ஆம் ஆண்டுகளில் தஞ்சாவூரை ஆண்ட நாயக்கமன்னர்கள் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டது. அதன் பின்னர் வந்த மராட்டியர் ஆட்சியில் மேம்படுத்தப்பட்ட இந்த நூலகத்தின் வளர்ச்சியில் மன்னர் இரண்டாம் சரபோஜியின் பங்கு அதிகம்.

இப்பெருமை வாய்ந்த இந்த நூலகத்தில் சோழர்கள், நாயக்கர்கள், மராட்டியர்களின் ஆட்சிக் காலத்தைச் சார்ந்த ஒரு லட்சத்துக்கும் அதிகமான ஓலைச் சுவடிகள், காகிதச் சுவடிகள், சுமார் 3 லட்சம் மோடி ஆவணங்கள் (மராட்டிய மொழியை எழுதப் பயன்படுத்தப்படும் சுருக்கெழுத்து) ஆகியவை உள்ளன.

இதில் பண்டைய தமிழர்களின் பண்பாடு பற்றிய தகவல்கள் இடம்பெற்றுள்ளதுடன் ஜோதிடம், மருத்துவக் குறிப்புகளும் இடம்பெற்றுள்ளன.

பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் இந்த நூலகத்தில் முழுநேர இயக்குநர் பதவி இருந்தாலும், அந்தப் பதவி 32 ஆண்டுகளாகக் காலியாக உள்ளது. எனவே, மாவட்ட ஆட்சியராகப் பதவியேற்பவர்கள்தான் இந்நூலகத்தின் இயக்குநர் பொறுப்பையும் கூடுதலாகக் கவனித்து வருகின்றனர். ஏற்கெனவே, ஆட்சியருக்கு இருக்கும் பணிச் சுமை காரணமாக இந்நூலகத்தில் முழுமையாகக் கவனம் செலுத்த இயலவில்லை. இதனால், முழுநேர இயக்குநர் பதவியை நிரப்ப வேண்டும் என்ற கோரிக்கை பல ஆண்டுகளாக விடுக்கப்பட்டு வந்தாலும், இன்னும் நிறைவேற்றப்படாமல் உள்ளது.

இந்நூலகத்தின் நிர்வாக அலுவலராக முதன்மைக் கல்வி அலுவலர் நிலையில் நியமிக்கப்பட்டாலும், முழு அதிகாரம் இல்லாததால் பிரச்னைகளும் வழக்கம் போலத் தொடர்கின்றன.

இந்நிலையில், இந்த நூலகத்தில் ஒவ்வோர் ஆண்டும் நிதிப் பற்றாக்குறை அதிகரித்து வருகிறது. ஏற்கெனவே நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டபோது (10 ஆண்டுகளுக்கு முன்பு) ஆண்டுக்கு ரூ. 40 லட்சமாக இருந்த நிதியுதவியை ரூ. 75 லட்சமாக அப்போதைய அரசு உயர்த்தியது.



தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகத்தின் முகப்புப் பகுதி.

அப்போது, ஓய்வு பெற்றவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்ததால், ஓய்வூதியமும், ஊழியர்களுக்கு ஊதியமும் வழங்குவதில் பிரச்னை ஏற்படவில்லை. காலப்போக்கில் ஓய்வு பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், இப்போது கிட்டத்தட்ட 40 பேர் ஓய்வூதியம் பெறுகின்றனர். ஒரு காலத்தில் இந்நூலகத்தில் 48 பேர் பணியாற்றி வந்த நிலையில், தற்போது நிரந்தர ஊழியர்கள் 19 பேர், தற்காலிகப் பணியாளர்கள் 18 பேர் என மொத்தம் 37 பேர் மட்டுமே பணியாற்றுகின்றனர்.

ஓய்வூதியத்துக்கு மட்டுமே மாதத்துக்கு ரூ. 6 லட்சம் முதல் ரூ.7 லட்சம் வரையும், ஊழியர்கள், பணியாளர்கள் ஊதியத்துக்கு மாதந்தோறும் ஏறத்தாழ ரூ. 12 லட்சமும் ஒதுக்கீடு செய்ய வேண்டிய நிலை உள்ளது. இதனால், இந்நூலகத்துக்கு தமிழக அரசு ஆண்டுக்கு ரூ. 75 லட்சம் வழங்கும் தொகை போதுமானதாக இல்லை. இதன் காரணமாக நூலகத்தில் ஓராண்டு காலமாக நிதிப் பற்றாக்குறை அதிகரித்து வருகிறது.

இதுகுறித்து ஊழியர்களும், ஓய்வூதியர்களும் கூறியதாவது: மாதந்தோறும் 31 அல்லது 1-ஆம் தேதி ஊதியமும், ஓய்வூதியமும் கிடைத்து வந்த நிலையில், ஓராண்டு காலமாகத் தாமதமாகிறது. மத்திய, மாநில அரசுகள் வழங்கும் வளர்ச்சிப் பணிக்கான நிதியை வைத்துத்தான் ஊதியமும், ஓய்வூதியமும் வழங்கப்படுகிறன. இதனால், கடந்த ஏப்ரல் மாதத்தில் 20-ஆம் தேதிதான் ஊதியம் வழங்கப்பட்டது. மே மாதத்தில் கடந்த வாரம்தான் ஓய்வூதியம் கிடைத்தது. ஜூன் மாதத்தில் ஊதியமும் ஓய்வூதியமும் எப்படி வரப் போகின்றன என்பது புரியவில்லை.

இதற்குத் தீர்வு காண்பதற்காக இயக்குநரும் (பொறுப்பு), நிர்வாக அலுவலரும் முயற்சி மேற்கொண்டாலும், அரசிடமிருந்து கூடுதல் நிதியுதவி கிடைப்பதில் தாமதமாகிறது. எனவே, அரசு நிதியுதவியை ஆண்டுக்கு ரூ. 1.50 கோடியாக உயர்த்தினால்தான், இந்நூலகத்தில் நிலவும் நிதி பிரச்னையை சமாளிக்க முடியும் என்றனர்.

இந்நூலகத்தை தமிழக முதல்வர் ஓராண்டுக்கு முன்பு ஆய்வு செய்து நூலகத்தின் பெருமைகளை அறிந்து வியந்து, தேவையான உதவிகள் செய்வதாகக் கூறினார். இதேபோல, பள்ளிக் கல்வித் துறை அமைச்சரும் ஓரிரு முறை ஆய்வு செய்து உரிய நடவடிக்கைகள் எடுப்பதாக உறுதியளித்தார்.

ஆனால், அதன் பின்னர் எந்தவித நடவடிக்கையும் இல்லாததால், இந்நூலகத்தின் நிதிப் பற்றாக்குறை மாதந்தோறும் அதிகரித்து வருகிறது. இதனால், உலகப் புகழ்பெற்ற இந்நூலகம் பெருமையை இழக்கும் அச்ச நிலை நிலவுகிறது. எனவே, இந்த நூலகத்தின் முன்னேற்றத்தில் தமிழக அரசு கவனம் செலுத்த வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

# லித்தியம் பேட்டரிக்கு தேவையான பெட்ரோலிய கரியை இறக்குமதி செய்ய அனுமதி

**புது தில்லி, ஜூன் 2:** லித்தியம்-அயன் பேட்டரியில் பயன்படுத்தப்படும் கிராஃபைட் நேர்மின் முனையை தயாரிப்பதற்கான மூலப்பொருளான பெட்ரோலிய கரியை இறக்குமதி செய்ய மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

பெட்ரோலியம் சுத்திகரிப்பின்போது கழிவாக மிஞ்சும் கரிமம் அதிகமுள்ள பெட்ரோலிய கரியை, சுற்றுச்சூழல் நலன் கருதி எரிவாயு பயன்பாடுகளுக்கு பயன்படுத்துவதற்கு முழுமையான தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தச் சூழலில், லித்தியம்-அயன் பேட்டரிக்கான மூலப்பொருளாகப் பயன்படுத்துவதற்காக மட்டும் அதை இறக்குமதி செய்ய மத்திய அரசு தற்போது அனுமதித்துள்ளது.

இதுகுறித்து வெளிநாட்டு வர்த்தக இயக்குநரகம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிவிக்கையில் கூறியிருப்பதாவது:

லித்தியம்-அயன் பேட்டரியில் பயன்படுத்தப்படும் கிராஃபைட் நேர்மின் முனையை தயாரிப்பதற்காக பெட்ரோலிய கரியை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படுகிறது. ஆனால், எரிபொருள் அல்லது பிற வர்த்தக பயன்பாடுகளுக்கும் இந்த அனுமதி பொருந்தாது. மேலும், சல்ஃபர் அளவு மிகக் குறைவாக உள்ள பெட்ரோலிய கரியை இறக்குமதி செய் யவேண்டும். அதாவது 0.8 சதவீதத்துக்கும் குறைவான அளவிலேயே அவற்றில் சல்ஃபர் இடம்பெற்றிருக்க வேண்டும். இது மாநிலமாசுக் கட்டுப்பாட்டு வாரியங்களால் கண்காணிக்கப்படும்.

மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் இந்திய பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் நிபந்தனைகள் மற்றும் வழிகாட்டுதல்களையும் பெட்ரோலிய கரி இறக்குமதியாளர்கள் பின்பற்ற வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

லித்தியம்-அயன் பேட்டரிகள் மின்சார வாகனங்களில் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

# மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுபவரே சிறந்த தலைவர்

## சதரபதி சிவாஜியை நினைவுகூாந்து பிரதமா மோடி பேசசு



ராய்கட கோட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விடியோ மூலம் உரையாற்றிய பிரதமர் மோடி.

**புது தில்லி, ஜூன் 2:** மக்களுக்கு நம்பிக்கையூட்டி அவர்களை ஊக்கப்படுத்துபவரே சிறந்த தலைவர் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

மராட்டிய மன்னர் சத்ரபதி சிவாஜி முடிசூட்டிக்கொண்ட 350-ஆவது ஆண்டு விழா வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்டது.

மகாராஷ்டிர மாநில அரசு சார்பில் சத்ரபதி சிவாஜி ஆட்சி நடத்திய ராய்கட் கோட்டையில் சிறப்பு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதில் பிரதமர் மோடியின் விடியோ உரை ஒளிபரப்பப்பட்டது. அதில் பிரதமர் பேசியதாவது:

சத்ரபதி சிவாஜியின் வாழ்க்கை அனைவருக்கும் உத்வேகம் அளிப்பதாகும். அவரது ஆட்சியில் நடைபெற்ற பணிகள், அவரது கொள்கைகள், அரசு நிர்வாகம் இன்று கடைப்பிடிக்க வேண்டியவையாகத் திகழ்கின்றன. அவரது ஆட்சியில் மக்கள் நலனே பிரதானமாக இருந்தது.

தேசம் குறித்த அவரது நோக்கமும், அவரது ஆளுமையும் வரலாற்றில் மற்ற எந்த மன்னருக்கும் இல்லாத சிறப்பை உடையது. மத்திய அரசு இப்போது கடைப்பிடித்து வரும் 'ஒரே பாரதம், உன்னத பாரதம்' என்பதும் சிவாஜியின் கொள்கைகளில் இருந்து பெறப்பட்டதுதான்.

அவரது துணிவும், தீரமிக்க செயல்பாடுகளும், போர் உத்திகளும், பண்பும் வியப்பை ஏற்படுத்துபவை.

அவரது ஆட்சி நிர்வாகத்தில் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவம், நீர் மேலாண்மை, மகளிர் மேம்பாட்டு நடவடிக்கைகள், சாமானிய மக்களும் அரசு நிர்வாகத்தை எளிதில் அணுகும் வசதி ஆகியவை சிறப்பாக இருந்தன.

350 ஆண்டுகளுக்கு முன்பு சிவாஜி முடிசூட்டிக் கொண்டபோது சுயராஜ்ஜியமும், தேசியவாதமும் புத்துயிர் பெற்றன. ஒரு சிறந்த தலைவர் என்பவர் மக்களுக்கு நம்பிக்கையூட்டி, அவர்களைத் தொடர்ந்து ஊக்கப்படுத்துபவராக இருக்க வேண்டும்.

சிவாஜி ஆட்சிக்கு வந்த காலகட்டத்தில் அந்நியர்களின் ஊடுருவல்களால் மக்களின் உத்வேகம் குறைந்திருந்தது. நமது மக்கள் மீது கலாசார ரீதியாகவும் தாக்குதல் நடத்தி தேசத்தின் நம்பிக்கையை அந்நியர்கள் சீர்குலைத்தனர். அப்போது, அந்நியர்களுக்கு எதிராக சிவாஜி போராடியது மட்டுமல்லாது, சுயராஜ்ஜியம் சாத்தியமானதுதான் என்று மக்களுக்கு நம்பிக்கையை அளித்தார். மக்களை அடிமை மனநிலையில் இருந்து வெளிக் கொண்டு வந்து தேசத்தைக் கட்டமைக்க ஊக்கப்படுத்தினார்.

வரலாற்றில் பல மன்னர்கள் படைபலத்தில் வலுவாக இருந்துள்ளனர். ஆனால், அவர்களின் அரசு நிர்வாகம் பலவீனமாகவே இருந்தது. அதே நேரத்தில் பல மன்னர்கள் நிர்வாகத்தில் சிறந்தவர்களாக இருந்துள்ளனர். ஆனால், படைபலம் சிறப்பாக இருந்ததில்லை. ஆனால், சிவாஜி நாட்டை நிர்வகிப்பதிலும், படைபலத்தை நிர்வகிப்பதிலும் தனிச் சிறப்பு வாய்ந்தவராக இருந்தார்.

தனது இளம் வயதிலேயே எதிரிகளுடன் போரிட்டு பல கோட்டைகளை வென்றுள்ளார். ஒரு மன்னராக சிறப்பான நிர்வாகச் சீர்திருத்தங்களை மேற்கொண்டு நல்லாட்சி அளித்துள்ளார்.

தனது மண்ணையும், கலாசாரத்தையும் அன்னியர்களிடம் இருந்து காப்பாற்றியது மட்டுமல்லாது, ஒரு சிறந்த தேசத்தைக் கட்டமைப்பது தொடர்பான தொலைநோக்குப் பார்வையும் அவரிடம் இருந்தது. இதன் காரணமாகவே அவர் பிற மன்னர்களிடம் இருந்து உயர்ந்து நிற்கிறார்.

கடலுக்கு நடுவே அவர் கட்டியெழுப்பிய கோட்டைகள் இப்போதும் கம்பீரமாக நிற்கின்றன. சுயராஜ்ஜியம், மத நம்பிக்கை, கலாசாரம், பாரம்பரியத்துக்கு எதிராகச் செயல்பட்டவர்களுக்கு அவர் வலுவான பதிலடியை அளித்தார். இது மக்களுக்கு உத்வேகம் அளித்தது.

இதன் மூலம் அவரது தேசத்தின் மீது மக்களுக்கு மதிப்பு அதிகரித்தது. பல தலைமுறைகளைத் தாண்டி இப்போது வரை அவர் மக்களுக்கு உத்வேகம் அளிப்பவராக உள்ளார் என்றார் பிரதமர் மோடி.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

**https://www.evastaliniasacademy.in/**

**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# குடியரசுத் தலைவருடன் அமித் ஷா சந்திப்பு



குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவை, அவரது மாளிகையில் வெள்ளிக்கிழமை சந்தித்த மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா.

**புது தில்லி, ஜூன் 2:** குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா வெள்ளிக்கிழமை சந்தித்துப் பேசினார்.

இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்டுள்ள மணிப்பூரில், கடந்த திங்கள்கிழமை முதல் 4 நாள்கள் அமித் ஷா சுற்றுப்பயணம் மேற்கொண்டு நிலைமையை நேரில் ஆய்வு செய்தார்.

மைதேயி, குகி சமூகங்களின் பிரதிநிதிகள், பாதுகாப்புப் படை அதிகாரிகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பல்வேறு சமூக அமைப்புகளின் தலைவர்கள் உள்ளிட்டோரைச் சந்தித்து, மாநிலத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்கான வழிமுறைகள் குறித்து அவர் ஆலோசித்தார்.

தனது பயணத்தை வியாழக்கிழமை நிறைவு செய்த அமித் ஷா, 'வன்முறைக்குத் தீர்வு காண மாநில ஆளுநர் அனுசுயா உய்கே தலைமையில் பல்வேறு தரப்பினர் அடங்கிய அமைதிக் குழு அமைக்கப்படும்; வன்முறைச் சம்பவங்கள் குறித்து ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையில் நீதி விசாரணை நடத்தப்படும்' என்பன உள்ளிட்ட முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டார். இதைத் தொடர்ந்து, அவர் தில்லி திரும்பினார்.

இந்நிலையில், குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவை அவரது மாளிகையில் அமித் ஷா வெள்ளிக்கிழமை சந்தித்துப் பேசினார். மரியாதை நிமித்தமாக குடியரசுத் தலைவரை சந்தித்ததாக ட்விட்டரில் அவர் பதிவிட்டுள்ளார்.

மணிப்பூரில் மைதேயி சமூகத்தினருக்கும், குகி பழங்குடியினருக்கும் இடையே கடந்த மாதம் ஏற்பட்ட கலவரத்தில் 80 பேர் உயிரிழந்தனர். ஏராளமான வீடுகளும் வழிபாட்டுத் தலங்களும் தீக்கிரையாக்கப்பட்டன. அங்கு ராணுவ கண்காணிப்பு நீடித்து வருவது குறிப்பிடத்தக்கது.

## செஷல்ஸ்

# 27 ஆண்டுகளுக்கு பிறகு அமெரிக்க தூதரகம்



**விக்டோரியா, ஜூன் 2:** கிழக்கு ஆப்பிரிக்க நாடான செஷல்ஸில் 27 ஆண்டுக்குப் பிறகு அமெரிக்காவின் தூதரகம் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. பனிப் போர் முடிவுக்குப் பிறகு வீண் செலவுகளைக் குறைப்பதற்காக செஷல்ஸில் இருந்த தங்களது தூதரகத்தை அமெரிக்கா கடந்த 1996-இல் மூடியது. இருந்தாலும், அந்தப் பிராந்தியத்தில் தற்போது சீனாவின் செல்வாக்கு அதிகரித்து வருவதை எதிர்கொள்வதற்காக அங்கு தூதரகம் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

## ஜப்பான்

# குழந்தைகள் பிறப்பு விகிதம் இதுவரை இல்லாத வீழ்ச்சி



**டோக்கியோ, ஜூன் 2:** ஜப்பானில் தொடர்ந்து 7-ஆவது ஆண்டாக குழந்தைகள் பிறப்பு விகிதம் சரிவைக் கண்டு 1.26-ஐ தொட்டுள்ளது. இந்த விகிதம், இதுவரை இல்லாத மிகக் குறைந்தபட்ச அளவாகும். அந்த நாட்டின் மக்கள்தொகையில் இளைஞர்கள் விகிதம் குறைந்தும், முதியோர் விகிதம் அதிகரித்தும் வரும் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கான திட்டங்கள் மிக மந்தமாக செயல்படுத்தப்படுவதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக நிபுணர்கள் கருதுகின்றனர்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

**https://www.evastaliniasacademy.in/**

**Contact Number - +91-8678969915, +91-9940332851**



# அணு ஆயுத ஒப்பந்தம் நிறுத்திவைப்புக்கு அமெரிக்கா பதிலடி

## ரஷிய நிபுணர்களுக்கு விசாக்கள் ரத்து

**வார்சா, ஜூன் 2:** அணு ஆயுத கையிருப்பை கட்டுக்குள் வைத்திருப்பதற்காக தங்களுடன் மேற்கொண்ட ஒப்பந்தத்தை ரஷியா நிறுத்திவைத்துள்ளதற்கு பதிலடியாக, அந்த ஒப்பந்தத்தின் கீழ் ரஷிய அணுசக்தி கண்காணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த நுழைவு இசைவுகளை (விசா) அமெரிக்கா ரத்து செய்தது.

இது குறித்து அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'நியூ ஸ்டார்ட்' அணு ஆயுத ஒப்பந்தத்தின் கீழ், அமெரிக்காவின் அணு ஆயுதக் கையிருப்பைப் பார்வையிடுவதற்காக சில ரஷிய நிபுணர்களுக்கு வழங்கப்பட்டிருந்த விசா ரத்து செய்யப்படுகிறது.

மேலும், நிலுவையில் உள்ள மேலும் சில ரஷிய நிபுணர்களின் விசா விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. அணு ஆயுதங்களைப் பார்வையிடுவதற்காக ரஷிய நிபுணர்களுக்கு தாராளமாக விசா வழங்கும் நடைமுறையும் நிறுத்திவைக்கப்பட்டது.

'நியூ ஸ்டார்ட்' ஒப்பந்தத்தை ரஷியா தொடர்ந்து மீறி வருவதற்குப் பதிலாகவே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பனிப் போர் காலத்தில் உலகின் 90 சதவீத அணு ஆயுதங்களை கைவசம் வைத்திருக்கும் அமெரிக்காவும் ரஷியாவும் பல முறை அணு ஆயுதப் போர் விளிம்புக்குச் சென்று வந்தன.

எனினும், பேரழிவை ஏற்படுத்தும் அத்தகைய போரை தவிர்ப்பதில் இரு நாடுகளுமே அக்கறை காட்டி வருகின்றன.

அதற்காகத்தான் அந்த ஆயுதங்கள் அவசரகதியில் பயன்படுத்தப்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காக இரு நாடுகளும் பல அடுக்கு பாதுகாப்பு நடைமுறைகளை உருவாக்கியுள்ளன.

இந்த நிலையில், அணு ஆயுதக் குவிப்பை தவிர்ப்பதற்கான 'நியூ ஸ்டார்ட்' ஒப்பந்தத்தை கடந்த 2010-ஆம் ஆண்டில் அமெரிக்க அதிபர் ஒபாமாவும் ரஷிய அதிபர் டிமித்ரி மெத்வதேவும் மேற்கொண்டனர்.

2011-ஆம் ஆண்டு முதல் அமலுக்கு வந்த அந்த ஒப்பந்தம், 2026 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

அந்த ஒப்பந்தத்தின் கீழ், 1,550 அணு ஆயுதங்கள் மற்றும் அத்தகைய ஆயுதங்களை ஏந்தி நீண்ட தொலைவு பாயக் கூடிய 700 ஏவுகணைகள் ஆகியவற்றுக்கு மேல் இருப்பு வைத்துக்கொள்வதில்லை என்று இரு நாடுகளும் உறுதியளித்தன.

இந்த வரம்பு மீறப்படாததைக் கண்காணிப்பதற்காக இரு நாட்டு அணுசக்தி மையங்களிலும் ஆண்டுதோறும் 18 முறை நிபுணர்கள் பரஸ்பரம் ஆய்வு செய்வதற்கும் இந்த ஒப்பந்தம் வழிவகை செய்கிறது.

எனினும், உக்ரைன் போர் விவகாரத்தால் இரு நாடுகளுக்கும் இடையே பதற்றம் அதிகரித்து வந்த நிலையில், 'நியூ ஸ்டார்ட்' ஒப்பந்தத்தை நிறுத்திவைப்பதாக ரஷிய அதிபர் விளாதிமீர் புதின் கடந்த பிப்ரவரி மாதம் அதிரடியாக அறிவித்தார்.

அந்த ஒப்பந்தத்தை மீறி அணு ஆயுதங்களை ஏந்திச் சென்று தாக்குதல் நடத்தக்கூடிய தங்களது விமான தளங்களில் உக்ரைன் தாக்குதல் நடத்துவதற்கு அமெரிக்கா வழி காட்டியதாகவும், அதனால் அந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் புதின் கூறினார்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

**https://www.evastaliniasacademy.in/**

**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# ஆங்கில வார்த்தை உச்சரிப்புப் போட்டி: இந்திய வம்சாவளி மாணவர் வெற்றி

**வாஷிங்டன், ஜூன் 2:** அமெரிக்காவில் தேசிய 'ஸ்பெல்லிங் பீ' என்ற ஆங்கில வார்த்தை உச்சரிப்புப் போட்டியில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 14 வயது 8-ஆம் வகுப்பு மாணவர் தேவ் ஷா பட்டம் வென்று சாதனை படைத்தார்.

அமெரிக்காவில் பல ஆண்டுகளாக இந்தப் போட்டி நடத்தப்பட்டு வருகிறது. பள்ளி மாணவர்கள் கலந்து கொள்ளும் இந்தப் போட்டியில் நடுவர்கள் குழு அளிக்கும் ஆங்கில வாக்கியத்தின் சரியான உச்சரிப்பை (ஸ்பெல்லிங்) மாணவர்கள் சொல்ல வேண்டும்.

95-ஆவது தேசிய ஆங்கில உச்சரிப்புப் போட்டி தற்போது நடத்தப்பட்டது. பல கட்டங்களாக நடத்தப்பட்ட இந்தப் போட்டியில் உலகம் முழுவதிலுமிருந்து 1.1 கோடி மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். இவர்களில் 11 பேர் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றனர்.




ஆங்கில வார்த்தை உச்சரிபபுப போட்டியில் வென்ற மகிழ்ச்சியில் மாணவா தேவ ஷா.

வாஷிங்டனின் மேரிலாண்ட் நேஷனல் ஹார்பரில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் நடுவர்கள் கேட்ட 'சமோஃபில்' என்ற ஆங்கில வார்த்தைக்கு சரியான உச்சரிப்பைத் தெரிவித்து தேவ் ஷா பட்டத்தை வென்றார். அவருக்கு பரிசாக 50,000 அமெரிக்க டாலர் (ரூ. 41.14 லட்சம்) வழங்கப்பட்டது.

பட்டம் வென்ற பின்னர் தேவ் ஷா கூறுகையில், 'வெற்றி பெற்றது கனவுபோல் இருந்தது. கடந்த மூன்று மாதங்களாக செய்த தியாகங்களுக்கு வெற்றி கிடைத்துள்ளது' என்றார்.

இந்தப் போட்டியின் பல்வேறு சுற்றுகளில் 'பதிபிடோட்மீட்டர், டோல்செஸ்டெர், ரோமாக், ஏகாக்ரஸ், ஸ்கிஸ்டோராச்சிஸ், போலியோரெடிக்ஸ், பெரியோசி, எக்ஸார்டேஷன், கோகோமட், அர்டோய்ஸ் உள்ளிட்ட வார்த்தைகளுக்கு சரியான உச்சரிப்பை தேவ் ஷா தெரிவித்திருந்தார்.

தனது மூன்றாவது மற்றும் இறுதி வாய்ப்பில் தேவ் ஷா பட்டம் வென்று சாதித்தார். இந்தப் போட்டியில் அதிகபட்சம் 14 வயது வரை உள்ள மாணவர்கள் மட்டுமே பங்கேற்க முடியும். இதற்கு முன்னர் 2019 மற்றும் 2021 போட்டிகளில் தேவ் ஷா பங்கேற்றுள்ளார்.

கடந்த 2022-ஆம் ஆண்டு தேசிய ஆங்கில வார்த்தை உச்சரிப்புப் போட்டியில் இந்திய வம்சாவளி மாணவி ஹரிணி லோகன் பட்டம் வென்றது குறிப்பிடத்தக்கது.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# திட்டங்களுக்காகவே...

EVA STALIN IAS ACADEMY

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

**https://www.evastaliniasacademy.in/**

**Contact Number - +91-8678969915, +91-9940332851**



தினமணி

# கலைஞர் மு.கருணாநிதி நூற்றாண்டு தொடக்கம்

விளம்பரச் சிறப்பிதழ் சென்னை – வேலூர் பதிப்பு 03-06-2023

## கருணாநிதி ஒரு சகாப்தம்

# தமிழுக்கு ஆற்றிய தொண்டுகள்...



தமிழுக்காகவும், தமிழகத்துக்காகவும் கருணாநிதியும் திமுகவும் ஆற்றிய தொண்டுகள் ஏராளம்.

- 1965-ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தீக்குளித்தவர்கள், காவலர்களின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்களிலும் பெரும்பாலானோர் திமுகவினர்.
- அண்ணா வழியில் கருணாநிதியும் தமிழ்ப் பயிற்றுமொழிக் கொள்கையில் உறுதியானவர். தமிழில் பயிலும் மாணவர்களுக்குச் சிறப்பு ஊக்கத்தொகை வழங்கவும் அவர் ஆணை பிறப்பித்தார். 1996-ஆம் ஆண்டு கருணாநிதி மீண்டும் முதலமைச்சரானபோது, மெட்ரிகுலேசன் பள்ளிகளிலும் தமிழைப் பாடமொழியாக்குவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டது.
- அனைத்துப் பள்ளிகளிலும் 1-ஆம் வகுப்பு முதல் 10-ஆம் வகுப்புவரை தமிழை ஒரு பாடமாகக் கட்டாயமாகக் கற்பிக்க வேண்டும் என்று சட்டத்தையும் நிறைவேற்றினார்.
- 2010-11-ஆம் ஆண்டு அண்ணா தொழிற்நுட்ப பல்கலைக் கழகங்களில் கட்டுமானவியல், இயந்திரவியல் ஆகிய பாடப் பிரிவுகளில் தமிழ்மொழி வழியாகக் கல்வி கற்க வகைச் செய்து, இந்தியாவிலேயே முதன் முறையாகத் தாய்மொழியில் கற்க ஆணையிடப்பட்டது. தமிழகத்தில் இன்றுஅனைத்துப் பள்ளிகளிலும் தமிழ் கற்பிக்கப்படுவதற்குக் கருணாநிதியே காரணம்.
- தமிழ்நாட்டில் உள்ள கல்லூரிகள் அனைத்திலும் பிற மாநில மாணவர்களும், வெளிநாட்டு மாணவர்களும் தமிழை ஒரு பாடமாகப் படித்தே ஆகவேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இனி, தமிழ்நாட்டில் தமிழைப் படிக்காமல் பட்டம் பெறும் பேச்சுக்கே இடமில்லை. இதை நிறைவேற்றியவர் கருணாநிதி.
- திருக்குறளை திருமண அழைப்பிதழ் முதல் அரசுப் பேருந்துகள், அலுவலங்கள் என அனைத்து இடங்களிலும், ஒவ்வொரு தமிழரின் உள்ளங்களிலும் கொண்டு சேர்த்ததில் கருணாநிதிக்கு முக்கிய பங்குண்டு.
- கருணாநிதி கவிதைகள் இயற்றியதுடன், கவியரங்கங்களுக்கும் தலைமை தாங்கி நடத்தியுள்ளார். அறிஞர் அண்ணா மறைந்தபோது, 'பூவிதழின் மென்மையினும் மென்மையான புனித உள்ளம் – அன்பு உள்ளம் அரவணைக்கும் அன்னை உள்ளம்' எனத் தொடங்கும் கலைஞர் பாடிய இரங்கற்பா, தமிழ் இலக்கிய வரலாற்றில் சிறப்பான ஓர் இடத்தைப் பெற்றுள்ளது.
- தமிழில் பெயர் வைக்கும் திரைப்படங்களுக்கு வரிவிலக்கு அளித்து ஆணை பிறப்பித்தார்.
- வழக்குமன்ற மொழியாகத் தமிழ்மொழியே இருக்கவேண்டும் என்பதுதான் அண்ணாவின் கொள்கை. இதை செயல்படுத்தியவர் கருணாநிதி.
- தமிழ் வழியில் படித்தவர்களுக்கு அரசுப் பணிகளில் 20 விழுக்காடு இடங்கள் ஒதுக்க உத்தரவிட்டவர் கருணாநிதி.
- அண்ணா வழியில், கருணாநிதியும் தமிழை நடுவண் அரசின் ஆட்சி மொழியாக்க வேண்டும் எனத் தொடர்ந்து வலியுறுத்தினார்.
- தமிழைச் செம்மொழியாக பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான மத்திய அரசு அறிவிப்பு. இதற்கு முழு முயற்சி எடுத்தவர் கருணாநிதி.
- தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறைக்காக ஒரு தனி அமைச்சகத்தை உருவாக்கியவர்.
- 1974-ஆம் ஆண்டு அன்றைய கழக அரசில் செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கத்தை நிறுவினார்.
- சென்னைப் பல்கலைக்கழகத்தின் வாயிலாக அஞ்சல் வழியில் தமிழ்க் கல்வியை நிறுவி, வெளிநாடுகளிலும் கல்வி மையங்களை ஏற்படுத்தினார். ■

EVA STALIN IAS ACADEMY

EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI
12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045
https://www.evastaliniasacademy.in/
Contact Number - +91-8678969915, +91-9940332851

EVA STALIN IAS ACADEMY